

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter

## குருதீபம்
ගුරුදීපම්
**Gurutheepam**

23.12.2021 சிறப்பிதழ் 06

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி கிரிஜா கந்தசாமி அவர்களின் அகவை 60 நிறைவில் வெளிவருகின்ற குருதீபம் சிறப்புச் செய்திமடல்!**

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



தனது உன்னதமான சேவை மூலம் அனைவரது மனங்களிலும் இடம் பிடித்த மணிவிழா நாயகி செல்வி கிரிஜா கந்தசாமியின் குருதீபம் மணி விழா சிறப்புச் செய்தி மடலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்வடைகின்றேன்.

உழைப்பு உறக்கம் உணவு மூன்றும் ஒழுங்குமுறையாக இருந்தால் மனிதன் நோய் இல்லாத நிலையில் வாழ்கையை வளமுடன் வாழ முடியும் என்பதை அன்றைய சித்தர்கள் முதல் இன்றைய வைத்தியர்கள் வரை கூறியுள்ளனர். வருடா வருடம் மூன்று அணியின், கிட்டத்தட்ட 400 பேர், ஆசிரிய மாணவர் அணி நல்வாழ்வு வாழ வேண்டும் என்று தினமும் காலை 5.00மணி முதல் மைதானத்தில் தனது நேரத்தை ஒதுக்கி வைத்து பயிற்றுவிக்கும் பண்பாளர்தான் செல்வி கிரிஜா கந்தசாமி.

மேலும் அவர் தனது பதவியை கல்லூரி மாணவர்களை வளப்படுத்த பல்வேறு முறைகளில் பயன்படுத்தி வந்திருக்கிறார். ஆசிரிய மாணவர்கள் ஒழுக்கம் பண்பாடு விழுமியங்கள் போன்ற பல அம்சங்களில் ஒன்றாக, நன்றாக இருக்கும் வண்ணம் தனது நேரத்தை ஒதுக்கி மைதானத்தில் மட்டுமன்றி விடுதிக் காப்பாளர் மற்றும் பரீட்சை கடமைகளிலும் தன்னை ஈடுபடுத்தி தனது அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய சேவை மூலம் ஆசிரிய மாணவர் மனதில் உறையும் தகைமையை பெற்ற ஒரு விரிவுரையாளர். சாதாரணமாக பாடசாலை மாணவர்கள் அனைவரும் அறிந்திருப்பது உடற் பயிற்சி ஆசிரியரைத்தான்! அந்தவகையில் செல்வி கிரிஜா கந்தசாமி அவர்களும் அனைவராலும் அறியப்பட்ட ஒருவராவார். பாடசாலை மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு எம்மால் உருவாக்கப்பட்ட ஆசிரியர்கள் தினமும் உதவி செய்து வருகின்றார்கள் என்றால் அது இவரால்தான் சாத்தியமாயிற்று. இவர் உருவாக்கி வைத்த, இவரைப் பார்த்து பின்பற்றி வருகின்ற ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் நாடெங்கனும் பணியாற்றி வருகின்றார்கள்.

தலைமைத்துவம் என்பது ஆளுக்காள் வேறுபடும் இயல்புடையது. ஒருவரின் நடை, உடை, பாவனை, சொல், செயல், சிந்தனை என்பன பிறரில் செலுத்தும் செல்வாக்கு அவருடைய தலைமைத்துவத்தினை மற்றவரில் அவரறியாமலேயே பிரயோகம் செய்து, செல்வாக்கினை ஏற்படுத்தி அவர்களையும் ஆட்கொண்டு விடுகின்றது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி வரலாற்றில் சுமார் 4000 இற்கு மேற்பட்ட மாணவ ஆசிரியர்களுடைய ஆளுமையில் இவரின் நடத்தைப் பண்புகள் செல்வாக்குப் பெற்றுள்ளது என்பதை யாவரும் அறிந்ததே அந்தவகையில் செல்வி கிரிஜா கந்தசாமி அவர்களின் சேவை பாராட்டிற்கு உரியது.

குறித்த காலத்தில் குறித்த மாணவ ஆசிரியர்களுக்கு போய்ச்சேர வேண்டிய வசதிகள் அனைத்தும் கிடைப்பதனை உறுதி செய்வோர் தற்போது அருகிவருகின்றனர்.

**தொடர்ச்சி 2ம் பக்கத்தில்...**

**மணிவிழா நாயகி**
**செல்வி கிரிஜா கந்தசாமி அவர்களுக்கு**
**"சரீர வித்தகி"**

**என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் பெருமையடைகின்றது!**

**மணி விழா நாயகியை வாழ்த்தி மகிழ்கின்றோம்!**



**செல்வி கிரிஜா கந்தசாமி**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 23.12.2021**

***போசகர்:***

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

***ஆலோசகர்கள்:***

செல்வி செ.செல்வமலர்
திரு. தி.ஜெயகாண்டீபன்
உப பீடாதிபதிகள்

***பிரதம ஆசிரியர்:***

திரு.ம.நிரேஸ்குமார்

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

***வெளியீடு***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி தொடர்ச்சி...

காலத்தில் தன் அயராத முயற்சியினால் இதனை நிறைவேற்றி மாணவ ஆசிரியர்களது தரத்தினை உயர்த்தியது மட்டுமல்லாமல் தன் பதவிப் பெயருக்கும் மகிமை ஊட்டியவர். மாணவ ஆசிரியர்களுடைய கடமைக் கூறுகள் அனைத்தையும் அறிந்து இப்படியெல்லாம் பணியாற்ற முடியும் என்பதனை மாணவ ஆசிரியர்களுக்கு உணர்த்தியவர் செல்வி கிரிஜா கந்தசாமி அவர்கள்.

எவ்வளவு தடைகள் வந்த போதிலும், வித்தியாசமான சூழ்நிலைகளுக்குள் ஆட்பட்ட போதிலும், மனதை பலவித எண்ணங்கள் தோன்றி அலைக் கழித்தாலும் மனம் தளராமல் மீண்டும் மீண்டும் தழைத்தெழ வேண்டும் என்ற அவாவுடன் இயங்குபவர்கள் மிகச் சிலரே. அவர்களுள் செல்வி கிரிஜா கந்தசாமி முதன்மையானவர்.

இவர் காலத்தின் தேவையால் சேவை நிறைவு பெற்றாலும் இவரது சேவை எமது கல்லூரிக்கு தேவை என்பதனைக் கூறிக் கொள்வதுடன், எதிர் காலத்தில் இவர் மேலும் சிறப்பாக உடல் வளமான வாழ்வு வாழ்ந்து சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டுப் பேரும் புகழும் பெற இறை ஆசி வேண்டி நிற்பதுடன் இவரது பணிகளுக்கு உறுதுணையாக இருந்து வந்த இவரின் தாயாருக்கும் குடும்பத்தினருக்கும் நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

வணக்கம்.

**திரு.சு.பரமானந்தம்**
**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

## சக விரிவுரையாளர் திரு.பொ.விஜயகுமாரனின் வாழ்த்துக் கவி!

இரவின் இருளை
கிழித்து நிலவாய் வரும் கிரிஜா
கல்லூரி வாழ்வோடு மலர்ந்த
காவிய வெளிச்ச மலர் நீ
உடற்பயிற்சி கரைதனை
தடையின்றி பிள்ளைகள் அடைய
நீர் எமக்காய் உழைத்தீர்
துடுப்பாய் இங்கே!

பிறந்திட்ட மண்ணிலே
பெறுபேறுகளை உயர்த்த வந்தீர்,
பெயரளவில் நின்றிடாது
புதுக்காவியம் படைத்து நின்றீர்
'ஆசான்' என்னும் சொல்லுக்கு
அசையாத இலக்கணமானீர்,
உடல் இலக்கியம் படைத்திடும்
உத்தம புத்திரி நீ!

ஆயிரமாயிரம் இதயங்களின்
அன்புக்கு மகுடமானீர்,
அவர்கள் கல்வியின் பாதைதனில்
கலங்கரை விளக்கானீர்!
உரைத்ததில்லை இதுவரை நீர்
மனம் புண்பட ஓர் வார்த்தை,
மறந்ததில்லை நாம் இங்கே வாழ்த்துரைக்க உமக்காக!

இளமை உம்மோடு இனிதாய் சங்கீதம் பாட
உயிரின் வேர்களில் உற்சாகம் ஊற்றெடுத்தோட
மனதின் மேடைதனில் மகிழ்ச்சி தாண்டமாட
மண்ணில் என்றென்றும் காற்று உம் புகழ் பாட
வரிகளில் தூது விடுகின்றேன்
உமக்கான நன்நாளிலே...
வல்லோனின் வரங்கள் எல்லைகள் தகர்த்து,
எங்கும் என்றென்றும் உம்மீது பொழிந்திடவே

உடலை ஆட்சி செய்யும் விளையாட்டை
ஆட்சி செய்ய கல்லூரிக்காய் பிறந்தவள் நீ
ஸ்கந்தா கூட்டிலிருந்து சிறகு முளைத்து
இன்பமாய் பறந்தவள் நீ
விளையாட்டை வளர்ப்பதில் சிறந்தவள் நீ
அதற்காய் அனைத்தையும் துறந்தவள் நீ
அனைவரும் தலையணையில் தாலாட்டுப் பெற
நீ மட்டும்
மைதானத்தில் தாலாட்டுப் பெற்றாய்

உனக்கு இன்று பிறந்தநாள்
உலகிற்கு அது சிறந்த நாள்
நீ மலர்ந்தத மார்கழி
உன்னால் மறந்தது சோம்பேறி பசி
அனைவருக்கும் பயிற்சி கொடுத்த உனக்கு மட்டும்தான்
அதன் விதைகள் முளைப்பது தெரியும்

நீ கலைவாணியின்
கை நழுவிய விளையாட்டு வீணை
இன்று உன் புகழ் எட்டுது வானை
அனைவரும் புத்தகத்துடன் பாடம் நடத்த
நீ மட்டும் புத்தான அகத்தொடும் பாடம் நடத்தி
உயர்ந்து நின்றாய் மாணவர் மனங்களில்...!

**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 23.12.2021**

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ‘சரீர வித்தகி’ செல்வி கிரிஜா கந்தசாமி அவர்களின் மணிவிழா சிறப்பிதழ்...!

மங்கள விளக்கேற்றி விளையாட்டு விழாவினை ஆரம்பித்து வைத்த தருணம்...



முதலாம் வருட மாணவ ஆசிரியர் ஒருவருக்கு சின்னம் சூட்டிய தருணம்...



சர்வதேச மகளிர் தினத்தில் விருந்தினர்களைக் கௌரவிக்கின்ற தருணத்தில்...



கொரோனா பெருந்தொற்றின் பின்னர் மீண்டும் கல்லூரிக்கு வருகை தந்த மாணவ ஆசிரியர்களை வரவேற்ற தருணத்தில்...



இயற்கையைப் பேணுவதற்காக மரங்களை நாட்டி மகிழ்ந்தவொரு தருணத்தில்...









This News letter was published by Jaffna National College of Education, Kopay on 23.12.2021

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் 'சரீர வித்தகி' செல்வி கிரிஜா கந்தசாமி அவர்களின் மணிவிழா சிறப்பிதழ்...!

**அரச சேவை நிறைவு நாளின் இறுதி நிமிட உணர்வு பூர்வமான தருணத்தில்...**



**அரச சேவை நிறைவு நாளில் மணிவிழா நாயகியை வாழ்த்தி மகிழ்ந்த தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள்...**



**சக விரிவுரையாளரின் மணிவிழாவில் அவரை வாழ்த்தி மகிழ்ந்த தருணத்தில்...**



**கல்லூரியின் மகிழ்ச்சியான தருணம் ஒன்றில்...**






## சக விரிவுரையாளர் திரு.க.ரட்ணேஸ்வரனின் மணிவிழா வாழ்த்து!

ஆரம்(ப) மெம் கல்லூரித் தேரினது வடம்!
வீர சங்கிலியன் விளையாட்டுத் திடலின் திடம்!
கிரிஜா வலமோ அரிய பலம்!
வாழ்த்துக்கள் அம்மணி!

## சக விரிவுரையாளர் திருமதி ஜெ.உதயகுமாரின் வாழ்த்துக் கவி!

உடற்கல்வித் துறையினை
உயிர்ப்புள்ள தாக்கியே
கடமையில் கண்ணாய்
கருமம் ஆற்றியே!

மணிவிழா நாயகி
மட்டற்ற சேவகி
பணியினைப் பாங்குடன்
புரிந்திட்ட புனிதையே!

விளையாட்டுத் துறையின்
வித்தகச் செருக்கே
சளையாத முயற்சியால்
சாதனைகள் படைத்தாயே!

கல்லூரியின் கண்ணியமே
களங்கமற்ற வெண்ணிலவே
பல்லாண்டு காலம்
பாரினில் வாழ்கவே!

**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 23.12.2021**